सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# வரவு - செலவுத் திட்ட உரை

## 2025 - 2026

திரு **ந. ரங்கசாமி**

மாண்புமிகு முதலமைச்சர்




மார்ச் 12, 2025

# வரவு - செலவுத் திட்ட உரை

# 2025 - 2026

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும். -குறள்

நீதி வழி நடந்து, நேர்மை தவறாமல் தன் குடிமக்களைக் காத்து வளர்க்கும் மன்னன், மக்களின் தலைவன் என்று மதித்துப் போற்றப்படுவான்.

***மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களே !***

**நா**ன் பெருமை வாய்ந்த இந்த அவையில், 2025-26ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க உள்ளேன். பதினைந்தாவது சட்டமன்றத்தில் எனது ஐந்தாவது வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். 2025-26ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் மற்றும் விளக்கக் குறிப்பு அறிக்கை ஆகியவற்றின் பிரதிகள் தங்களின் மேலான பார்வைக்கு வழங்கப்பட உள்ளன.

**2.** மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி ஜி அவர்களின் தொடர் வழிகாட்டுதலுக்கும், கனிவான ஆதரவிற்கும் என் இதயம் கனிந்த முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய மற்றும் புதுச்சேரி அரசின் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகளினால் எனது அரசு பல்வேறு வளர்ச்சிக்கான சமூக நலத்திட்டங்களை குறிப்பாக கல்வி மற்றும் சுகாதார துறைகளில் கடந்த நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக செவ்வனே செயல்படுத்தி வருகிறது. மேலும், ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீரான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை எனது அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அனைத்து துறைகளிலும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

**3.** எனது அரசு நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தி, சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தி, எதிர்க்கால சமுதாய வளர்ச்சியில் முதலீடு செய்து புதுச்சேரி மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தியுள்ளது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துகொள்கிறேன்.

**4.** 2025-26ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ₹ 13,600 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், இவ்வாட்சிப்பரப்பின் சொந்த வருவாய் ₹ 7,641.40 கோடியாகும், மாநில பேரிடர் நிவாரண நிதியையும் சேர்த்து மத்திய அரசின் நிதி உதவி (Normal Central Assistance including UTDRF)

₹ 3,432.18 கோடியாகும். மத்திய சாலை நிதி (Central Road Fund) ₹ 25 கோடி மற்றும் மத்திய அரசுத் திட்டங்களின்கீழ் (Centrally Sponsored Schemes) வழங்கும் நிதி ₹ 400 கோடியாக இருக்கும். மேலும், நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்டும் பொருட்டு பேரம் பேசி வாங்கும் கடனையும் சேர்த்து (Borrowing including Negotiated Loan) ₹ 2,101.42 கோடி கடன் பெற மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ₹ 13,600 கோடியில், ₹ 11,624.72 கோடி வருவாய்ச் செலவினங்களுக்காகவும் மற்றும் ₹ 1,975.28 கோடி மூலதன செலவினங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021-22-ஆம் நிதியாண்டில் மொத்த செலவீனங்களில், 1.66 விழுக்காடாக இருந்த மூலதன செலவீனம், 2025-26ஆம் நிதி ஆண்டில் 9.80 விழுக்காடாக கணிசமாக அதிகரித்துள்ளது.

**5.** எனது அரசு 2025-26ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சிறப்பு நிதியத்திற்காக ₹ 2,760 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில்

(i) மகளிருக்கான சிறப்பு நிதியத்திற்காக (Gender Budgeting) ₹ 1,458 கோடி;

(ii) இளையோர் சிறப்பு நிதியத்திற்காக (Youth Budgeting) ₹ 613 கே-ாடி; மற்றும்

(iii) பசுமை சிறப்பு நிதியத்திற்காக (Green Budgeting) ₹ 689 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. அரசின் நிதி ஆதாரங்களின் பெரும்பகுதி சம்பளம், ஓய்வூதியம், கடன் மற்றும் வட்டி செலுத்துதல் உள்ளிட்ட முக்கிய செலவினங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 2025-26ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ₹ 13,600 கோடியில், ₹ 2,650 கோடி சம்பளங்களுக்கும் (19.49 விழுக்காடு), ₹ 1,566 கோடி ஓய்வூதியங்களுக்கும் (11.51 விழுக்காடு), ₹ 1,867 கோடி கடன் மற்றும் வட்டி செலுத்துவதற்காகவும் (13.73 விழுக்காடு), ₹ 2,546 கோடி மின்சாரம் வாங்குவதற்காகவும் (18.72 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசின் மற்ற முக்கிய நலத்திட்டங்களான இலவச அரிசி, விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம், முதியோர் ஓய்வூதியம், குடும்ப தலைவிக்கு நிதியுதவி, எரிவாயு சிலிண்டருக்கான மானியம் உள்ளிட்ட பிற நலத் திட்டங்களுக்கு ₹ 2,110 கோடியும் (15.51 விழுக்காடு), அரசு உதவி பெறும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு ₹ 523 கோடியும் (3.85 விழுக்காடு) மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ₹ 1,148 கோடியும் (8.44 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. இந்த முன்னுரையுடன், 2025-26ஆம் நிதி ஆண்டிற்கான துறைவாரியான மானியக் கோரிக்கைகளை நான் சமர்ப்பிக்கிறேன்.

**வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்**

**8.** மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மை முக்கிய பங்காற்றி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். விவசாயிகள் நவீன வேளாண் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, நீடித்த நிலையான வேளாண் வளர்ச்சியை ஏற்படுத்தி, அவர்களின் வருமானத்தை உயர்த்துவதே எனது அரசின் முக்கிய நோக்கமாகும். விவசாய நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் விதமாக எனது அரசு பல்வேறு வேளாண் நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது.

**9.** புயல் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்பீடுகளை ஈடுகட்டும் வகையில் புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பிராந்தியங்களின் கடலோரப் பகுதிகளில் தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இந்த ஆண்டு முதல் வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (Restructured Weather Based Crop Insurance Scheme) நடைமுறைபடுத்தப்படும். மேலும், மற்ற பயிர்க் காப்பீட்டுகளுக்கு செலுத்த வேண்டிய பிரிமியம் தொகையை அரசே செலுத்துவதுபோல், தென்னை மர காப்பீட்டிற்கும் அரசே செலுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், புதுச்சேரி விவசாய தொழிலாளர்கள் நல சங்கத்தில் பதிவு செய்துள்ள அனைத்து விவசாய தொழிலாளர்களுக்கும் மழைக்கால நிவாரணமாக வருடத்திற்கு ₹ 2,000 வரும் நிதியாண்டு முதல் வழங்கப்படும்.

**10.** புதுச்சேரி தொலைநோக்குப் பார்வை-2047 என்ற செயல் திட்டத்தின்கீழ், புதுச்சேரியை ஒரு முழுமையான உயிர் வேளாண்மை (Organic Farming) மாநிலமாக மாற்றத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மத்திய அரசின் இயற்கை விவசாயத்திற்கான தேசிய இயக்க திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

**11.** பொதுவாக நெற்பயிர் மட்டுமே சாகுபடி செய்யக்கூடிய விலை நிலங்களில், மண் வளத்திற்கு ஏற்றவாறு பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் சிறு தானிய பயிறு வகைகளையும் சாகுபடி செய்வதை ஊக்குவிக்கப்படும். இதன் பொருட்டு, “பயிர் பல்வகைப்படுத்தல்” திட்டத்தின்கீழ் உயர் ரக அதிக விளைச்சல் தரக்கூடிய விதைகள், பொதுப் பிரிவு விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும், அட்டவணை இன விவசாயிகளுக்கு 90 விழுக்காடு மானியத்திலும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகள் விளைவிக்கும் பயறு வகைகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்யும் பொருட்டு மத்திய அரசின் PM-AASHA திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்படும்.

**12.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 216.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வனம் மற்றும் வனவிலங்கு**

**13.** எனது அரசு, அறிவியல் தொழில்நுட்ப உதவியுடன் புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாத்தலில் கவனம் செலுத்தி வருகிறது.

**14.** எனது அரசு வனம் மற்றும் வனம் அல்லாத பகுதிகளில் மூன்று இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்குத் திட்டமிட்டுள்ளது. மேலும், மரம் நடுவுவதை ஊக்குவிக்கும் பொருட்டு தொழில்துறை நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பள்ளிகள் மற்றும் பொதுமக்களுக்கு ஒரு இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்படும்.

**15.** கடல் ஆமைகளை பாதுகாக்கும் பொருட்டு, இயற்கையான குஞ்சு பொரித்தல் முறையைப் பயன்படுத்தி கடல் ஆமை முட்டைகளைக் குஞ்சு பொரிக்க வைத்து மீண்டும் கடலில் விடப்படும். மத்திய அரசின் “சதுப்பு நிலக்காடுகள் மற்றும் கடற்கரை வாழ்விடங்கள்” (MISHTI) திட்டத்தின் கீழ் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள சதுப்பு நில பகுதியை கணக்கெடுத்து சதுப்பு நிலக் காடுகளின் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்.

**16.** எதிர்வரும் நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 13.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்**

**17.** மூன்றில் இரண்டு பங்கு கிராமப்புற மக்களின் முக்கிய வாழ்வாதாரமாகவும், கூடுதல் வருவாயை அளிக்கும் முக்கிய வேளாண் சார்ந்த தொழிலாகவும் கால்நடை பராமரிப்பு திகழ்ந்து வருகிறது. எனவே, எனது அரசு கிராமப்புற பெண்கள் மற்றும் கால்நடை விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கும் நோக்கில் பல்வேறு புதிய நலத் திட்டங்களை எதிர்வரும் நிதியாண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**18.** "சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ்" பால் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் அல்லாத கால்நடை விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானிய விலையில் 7,500 கறவைப் பசுக்களுக்கு சரிவிகித மாட்டுத் தீவனம் மற்றும் 2,500 கலப்பின கன்றுகளுக்கு சரிவிகித கன்றுத் தீவனம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பில் பால் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு 50 விழுக்காடு மானியத்தில் (ஒரு பசுவின் விலை 60 ஆயிரம்) இரண்டு கறவைப் பசுக்கள் 1,500 பயனாளிகளுக்கு வழங்கப்படும். மேலும், தேசிய கால்நடை இயக்க திட்டத்தின்கீழ், புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள 10,000 கறவைப் பசுக்கள் மத்திய அரசின் 85 விழுக்காடு பங்களிப்புடன் காப்பீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**19.** புறக்கடை கோழி வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காகவும், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை அதிகரித்து கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் பொருட்டு 6 வாரம் வளர்க்கப்பட்ட 12,000 கடக்நாத் கோழிகள், 25,000 வான்கோழிகள் இலவசமாக வழங்கப்படும். மேலும், முட்டையிடும் 20 கோழிகள், தீவனம் மற்றும் கூண்டு கொண்ட தொகுப்பு 2,500 பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

**20.** மேலும், கால்நடை விவசாயிகளின் நலன் கருதி.–

(i) 200 பயனாளிகளுக்கு ₹ 60,000 மதிப்புடைய தீவன உருண்டை உற்பத்தி செய்யும் இயந்திரம் (Hydroponics Fodder unit);

(ii) 100 பயனாளிகளுக்கு ₹ 35,000 மதிப்புடைய தீவன புல் வெட்டும் இயந்திரம் (Fodder Chaff Cutter);

(iii) 100 பயனாளிகளுக்கு ₹ 60,000 மதிப்புடைய கால்நடை குச்சித் தீவனம் தயாரிக்கும் இயந்திரம் (Cattle Pellet Feed Unit);

(iv) 2,000 பயனாளிகளுக்கு பசுந்தீவன பற்றாக்குறையை ஈடு செய்யும் பொருட்டு பசுந்தீவன சைலேஜ் (Green Fodder Silage); மற்றும்

(v) ₹ 2,500 மதிப்புடைய கால்நடை ரப்பர் மிதியடிகள் (Rubber Floor Mat) 2,000 பயனாளிகளுக்கும் இலவசமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**21.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 82.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கலை மற்றும் பண்பாடு**

**22.** கலை மற்றும் பண்பாடு அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை அனைவரும் அறிந்ததே. நலிந்த கலைஞர்கள், தமிழ் அறிஞர்கள், கலைமாமணி, தமிழ்மாமணி, தெலுங்கு ரத்னா மற்றும் மலையாள ரத்னா விருது பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர நிதி உதவி தொடர்ந்து வழங்கப்படும். மேலும், 2015 முதல் 2021 ஆண்டுகளுக்கான தமிழ்மாமணி விருதுகள் தகுதியான கலைஞர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சொற்பொழிவாளர் (இலக்கியம்) மற்றும் புகைப்படம்/திரைப்படம்/ஆவணப்படம் ஆகிய துறைகளுக்கும் புதுவைக் கலைமாமணி விருது வழங்கும் பொருட்டு தகுதியான கலைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வரும் நிதி ஆண்டு முதல் விருதுகள் வழங்கப்படும்.

**23.** காரைக்கால் அம்மையார் பெயரில் விருதுகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. காரைக்கால் பகுதியில் அருங்காட்சியகம் மற்றும் காரைக்கால் அம்மையார் பெயரில் கலையரங்கம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்குகொள்வதற்கு ஏதுவாக காரைக்கால் நேரு நகர் பகுதியில் நூலகத்துடன் கூடிய பயிற்சி மையம் ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**24.** பாவேந்தர் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகத்தில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள இரண்டு அருங்காட்சியகங்கள் மத்திய அரசின் நிதியுதவியுடன் மேம்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்படும். மேலும், புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து அரசு கிளை நூலகங்களும் பழுதுபார்த்து புனரமைக்கப்படும்.

**25.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 40.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்

**26.** விலையில்லா அரிசி வழங்கல் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு நவம்பர் 2024 வரை அரிசிக்கு பதிலாக அதற்குண்டான தொகையினை நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. இதனை பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க

கடந்த டிசம்பர் 2024 முதல் பயனாளிகளுக்கு அனைத்து நியாய விலைக்கடை மூலம் அரிசியாக தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்த இலவச அரிசி வழங்கும் திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ₹ 300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**27.** எனது அரசு, வரும் நிதியாண்டு முதல் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது வழங்கப்படும் இலவச அரிசியோடு சேர்த்து, 2 கிலோ கோதுமையும் இலவசமாக வழங்கப்படும் என்பதை நான் மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**28.** பொதுமக்களின் நலன் கருதி குடிமைப் பொருள் வழங்கல் அட்டை தொடர்பான அனைத்து சேவைகளும் பொது சேவை மையம் (Common Service Centre) மற்றும் கிராம அளவிலான தொழில் முனைவோர்கள் (Village Level Entrepreneurs) மூலமாக விரிவுப்படுத்தப்படும். புதியதாக பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் செய்தல் முதலிய சேவைகளை பொதுமக்கள் இணையதளம் மூலம் தாங்களாகவே செய்து கொள்ள வழிவகை செய்யப்படும். மேலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு தன்னார்வ நுகர்வோர் மையங்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படும்.

**29.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 366.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

**30.** நாட்டின் சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கு கூட்டுறவு துறையின் சேவை முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை இந்த அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனது அரசு, நலிவடைந்த கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நிறுவனங்களை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**31.** தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்துடன் (NDDB) இணைந்து ₹ 34.35 கோடி மதிப்பீட்டில் பாண்லே நிறுவனத்தில் 20 TLPD திறன் கொண்ட ஐஸ்கிரீம் தயாரிக்கும் பிரிவு ஒன்றை நிறுவ இவ்வரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**32.** மத்திய அரசின் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (NPDD), ₹ 3.45 கோடி மதிப்பீட்டில் பாண்லே நிறுவனத்தில் மூன்றாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 5 பால் குளிரூட்டும் சாதனம் நிறுவுதல், பால் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தை மேம்படுத்துதல், தொடக்க மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சார்ந்த 300 ஊழியர்கள் மற்றும் 510 கால்நடை விவசாயிகளுக்கு தேவையான பயிற்சி அளித்தல் போன்றவை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**33.** தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில்

75 விழுக்காடு மானியத்தில் கறவை மாடுகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைக்கும் பொருட்டு தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மூலம் 75 விழுக்காடு மானியத்தில் சைலேஜ் (Silage) வழங்கப்படும். பாண்டெக்ஸ், பாண்ஃபேப் மற்றும் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்தும் பொருட்டு நடப்பு நிதியாண்டில் ₹ 4.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**34.** இவ்வாட்சிப்பரப்பில் அமைந்துள்ள புதுச்சேரி கூட்டுறவு நூற்பாலைகளின் வளர்ச்சி மற்றும் சீரான செயல்பாட்டிற்கு வரும் நிதியாண்டில் ₹ 5 கோடி நிதி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பிராந்தியங்களில் செயல்படும் 484 நியாய விலைக் கடைகளுக்கு ஆண்டுக்கு தற்போது வழங்கும் மானியமான ₹ 90,000-ஐ ₹ 1,75,000ஆக உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**35.** புதுச்சேரி லிங்காரெட்டிப்பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை தனியார் பங்களிப்புடன் மீண்டும் இயக்குவதற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**36.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 60.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக்கல்வி**

**37.** சமுதாய மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு தரமான கல்வி வழங்குதல் முக்கியமாகும். எனவே எனது அரசு மாணவர்களின் கல்வித் தரத்தை மேலும், மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**38.** பள்ளி மாணவர்களின் நலனைக் கருதி விலையில்லா புத்தகப் பைகள், பள்ளிச் சீருடைகள், காலணிகள், குறிப்பேடுகள், பாடப் புத்தகங்கள், மடிக்கணினிகள் உள்ளிட்ட உபகரணங்கள் தற்போது மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவை வரும் நிதியாண்டிலும் மேலும் சிறப்பாக தொடரும் வண்ணம் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**39.** அரசு மற்றும் அரசு உதவிபெறும் மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தை எனது அரசு வெற்றிகரமாக நடைமுறைபடுத்தி வருகிறது. 2022-23ஆம் கல்வியாண்டில் விடுபட்ட மாணவர்களுக்கும், 2025-26ஆம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கும் வரும் கல்வியாண்டில் இலவச மடிக்கணினிகள் வழங்கப்படும்.

**40.** மாணவர்களின் புதுமை மற்றும் படைப்பாற்றலை வளர்க்கும் பொருட்டு புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் இயங்கும் இந்தியாவின் எழுச்சிக்கான பிரதம மந்திரி பள்ளிகளில் (PM SHRI) அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்

ஆகியவற்றில் திறன்களை வளர்ப்பதற்காக அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பள்ளிகளில் கற்றல் திறனை மேம்படுத்த தொடுதிறன் வசதி கொண்ட பொலிவுறு வகுப்பறைகள் (SMART Interactive Board) அமைக்கப்படும்.

**41.** அரசுப்பள்ளி ஆசிரியர்களின் கற்பித்தல் திறன், மாணவர்களின் கற்றல் திறன் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை கண்காணித்து செயல்படுத்தும் பொருட்டு மத்திய அமைச்சகத்தின் பரிந்துரைப்படி நிறுவப்பட்ட "கற்றல் மதிப்பாய்வு மையம்" வரும் கல்வி ஆண்டு முதல் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும். மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் பாடத்திட்டத்தினை (CBSE) அரசு பள்ளி மாணவர்களுக்கு திறம்பட கற்பித்திட ஆசிரியர்களுக்கு போதிய பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும். அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் CBSE-யின் விதிமுறைகளின்படி தீ பாதுகாப்பு உபகரணங்கள் நிறுவ வரும் நிதியாண்டில் ₹ 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**42.** பள்ளி மாணவர்களின் உடல் நலத்தை கருத்தில் கொண்டு ஊட்டச்சத்துமிக்க பல்வேறு சிறுதானிய சிற்றுண்டி மாலை நேரங்களில் வாரத்திற்கு இரண்டு பள்ளி நாட்களில் வழங்கப்பட்டு வருகிறது. இவை அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் வழங்கப்படும்.

**43.** மதிய உணவுத் திட்டத்தின்கீழ் தற்போது வாரம் 3 நாட்களுக்கு மட்டும் முட்டை வழங்கப்பட்டு வருகிறது. இதனை வரும் கல்வியாண்டு முதல் அனைத்து பள்ளி நாட்களிலும் வழங்கப்படும் என்பதை இந்த மாண்புமிகு அவையின் உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**44.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 1,032.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி**

**45.** வளர்ச்சியடைந்த நாடாக அங்கீகாரம் பெறுவதற்கு உயர் கல்வியின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். ஏழைக் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைய உயர் கல்வி அவசியம். மேலும், தொழிற்சாலைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சீரான மற்றும் தரமான மனித ஆற்றலைப் பெறுவதற்கு எனது அரசு அனைவருக்கும் உயர் கல்வி கிடைக்க அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**46.** எனது அரசு உயர் கல்வி குறைந்த செலவில் அனைவருக்கும் கிடைக்க உறுதி பூண்டுள்ளது. தற்போது சென்டாக் மூலம் தேர்வு செய்யப்பட்டு மருத்துவம், பொறியியல் மற்றும் செவிலியர் பாடப்பிரிவுகளில் பயிலும் மாணவர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் நிதி உதவித் திட்டத்தின் கீழ் நிதி உதவி

வழங்கப்பட்டு வருகிறது. வரும் கல்வி ஆண்டு முதல் அரசு ஒதுக்கீட்டின்கீழ் சென்டாக் மூலம் சேர்க்கை பெறும் அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். மேலும், இளங்கலை நீட் பாடப்பிரிவுகளில் அரசு பள்ளி மாணவர்களுக்கான 10 விழுக்காடு ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கை பெறும் மாணவர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் நிதி உதவித் திட்டத்தின்கீழ் 100 விழுக்காடு கட்டண விலக்கு அளிக்கப்படும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் நிதிச்சுமையை குறைக்கும் பொருட்டு 100 விழுக்காடு கல்விக்கட்டணம் (Tuition Fee) விலக்கு அளிக்கப்படும். இதன் மூலம் அனைவருக்கும் சமமான மற்றும் எளிதில் கல்வி கிடைக்க வழிவகை செய்வதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**47.** ஆறாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து இளநிலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதம் தோறும் ₹ 1,000 மூன்று ஆண்டுகளுக்கு ஊக்குவிப்புத் தொகையாக இக்கல்வியாண்டு முதல் வழங்கப்படும். இதற்காக ₹ 9.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**48.** மத்திய அரசின் பிரதம மந்திரி உயர் கல்வித் திட்டத்தின்கீழ் (PM-USHA), ₹ 25 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி, தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரைக்கால், அவ்வையார் அரசு மகளிர் கல்லூரி மற்றும் மாகி, மகாத்மா காந்தி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆகிய 3 கல்லூரிகளின் தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

**49.** அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களின் செயல்பாடுகளை கண்காணிக்கும் பொருட்டு ஒரு டிஜிட்டல் தளம் “கல்லூரி மேலாண்மைத் திட்டம் (CMS)” அமைக்கப்பட்டுள்ளது, இவை 2025-26ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**50.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 360.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விளையாட்டு மற்றும் இளைஞர் நலம்**

**51.** மாணவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி அதன் மூலம் மாநில, தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க வகை செய்யும் பொருட்டு இவ்வரசு பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, பல்வேறு விளையாட்டு பிரிவுகளில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இதற்காக வரும் நிதியாண்டில் ₹ 3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நகர மற்றும் கிராமப்புறங்களில் ₹ 9 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு மைதானங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ₹ 4.50 கோடி மதிப்பீட்டில் கிராமப்புற இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சிறிய உள்விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும். காரைக்கால் விளையாட்டு அரங்கத்தில் ₹ 7 கோடி மதிப்பீட்டில் செயற்கை தடகளப் பாதை (Synthetic Athletic track) அமைக்கப்பட உள்ளது.

**52.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 34.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மின்துறை**

**53.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து நுகர்வோருக்கும் தடையற்ற மின்சாரம் வழங்குவதே எனது அரசாங்கத்தின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகும், இதற்காக இவ்வாட்சிப்பரப்பில் மின் பரிமாற்றம் மற்றும் மின் விநியோக உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும் நவீனமயமாக்கவும் ஒருங்கிணைந்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**54.** புதுச்சேரி இலாஸ்பேட்டை பகுதியில் வசிக்கும் மக்கள் தடையற்ற மற்றும் நிலையான மின்சாரம் பெறுவதற்கு ஏதுவாக ₹ 44.52 கோடி மதிப்பீட்டில் 50MVA மின் மாற்றிகள் கொண்ட 110/22 KV வாயு காப்பு துணை மின் நிலையம் அமைக்க இந்திய மின் கட்டமைப்பு கழகத்திடம் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் 18 மாதங்களில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல் ₹ 92.26 கோடி மதிப்பீட்டில் தவளக்குப்பத்தில் உள்ள துணை மின்நிலைய மேம்பாட்டு பணிக்கு நிர்வாகரீதியான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**55.** புதுச்சேரி பகுதியில் அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்வதற்காக, கோர்க்காடு துணை மின்நிலையத்தின் திறனை 32 MVAலிருந்து 50 MVAஆகவும், தேத்தாம்பாக்கம் துணை மின் நிலையத்தின் திறனை 20 MVAலிருந்து 26 MVA ஆகவும் மற்றும் காலாப்பட்டு துணை மின்நிலையத்தின் திறனை 20 MVAலிருந்து 26 MVAஆகவும் உயர்த்துவதற்காக ₹ 15.90 கோடி மதிப்பிலான பணிகள் இந்திய மின் கட்டமைப்பு கழகத்திடம் வழங்கப்பட்டுள்ளன. பணிகள் வரும் டிசம்பர் 2025க்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் முடிந்ததும், கோர்க்காடு, தேத்தாம்பாக்கம் மற்றும் காலாப்பட்டு பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள மக்கள் தடையற்ற மற்றும் தரமான மின்சார விநியோகத்தைப் பெறுவார்கள்.

**56.** புதுப்பிக்கப்பட்ட விநியோகத் திட்டத்தின் கீழ், தற்போதுள்ள மின் விநியோக அமைப்பை வலுப்படுத்த ₹ 106.59 கோடி மதிப்பீட்டில் புதிய மின்மாற்றிகள் நிறுவுதல் மற்றும் புதிய மின் வழித் தடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்கான கள ஆய்வு நிறைவடைந்துள்ளது. மார்ச் 2026க்குள் இதற்கான பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**57.** தொண்டமாநத்தம் பகுதியில் ₹ 27.73 கோடி மதிப்பீட்டில் ஒரு கூடுதல் 100 MVA தானியங்கி மின்மாற்றிகள் கொண்ட 230/110 KV, தானியங்கி துணை மின்நிலையம் அமைக்கும் பணிகள் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இப்பணிகள் வரும் ஆண்டு நிறைவடையும்.

**58.** வில்லியனூர் துணை மின்நிலையத்தில் ₹ 30 கோடி செலவில் 100 MVA மின் மாற்றிகள் கொண்ட 230/110 KV துணை மின் நிலையம் கூடுதலாக நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், குரும்பாபேட் மற்றும் மரப்பாலம் பகுதியில் அதிகரித்து வரும் மின்நுகர்வைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ₹ 21.22 கோடி மதிப்பீட்டில் அங்குள்ள துணை மின்நிலையங்களில் தற்போதுள்ள மின்மாற்றிகளின் திறனை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**59.** ₹ 42.10 கோடி மதிப்பீட்டில் வெங்கட்டா நகர் 110/22-11 KV துணை மின்நிலையத்திலிருந்து ஜிப்மர் வளாகம் வாயு காப்புத் துணை மின் நிலையம் வரை 110/22 KV புதை மின் வடங்கள் அமைக்கும் பணிகள் மார்ச்-2026க்குள் நிறைவடையும். இந்தத் திட்டம் முடிந்ததும், வெங்கட்டா நகரில் உள்ள 110/22-11 KV துணை மின்நிலையத்திற்கும், ஜிப்மரில்

உள்ள 110/22-11 KV துணை மின்நிலையத்திற்கும் மாற்று மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும். மேலும், தற்போது இலாஸ்பேட்டை பகுதியில் அமைக்கப்பட்டுவரும் 110/22 KV துணை மின்நிலையத்திற்கும் இப்பகுதியிலிருந்து இணைப்பு வழங்கப்படும்.

**60.** இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைத்து மின்விநியோக கட்டமைப்புகளை நவீனமயமாக்குதல், புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய உள்கட்டமைப்பு பணிகளை ₹ 472 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள மத்திய அரசிடம் விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டில் 60 விழுக்காடு மத்திய அரசின் பங்களிப்பாகவும், 40 விழுக்காடு நிதி நிறுவனங்களிடமிருந்தும் அரசு கடனாக பெறப்படவுள்ளது.

**61.** புதுச்சேரி மின்துறையின் மின்சுமை கண்காணிப்பு மற்றும் மின் தரவுகள் கையகப்படுத்தலை (SCADA) ₹ 35 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும். இப்பணிகள் வரும் நிதியாண்டில் தொடங்கி அடுத்த நிதியாண்டில் நிறைவடையும். இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கும்.

**62.** பிரதம மந்திரியின் இலவச சூரிய ஒளி மின்சாரம் வழங்கும் திட்டத்தின்கீழ் (PMSGMBY) புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் 13,000 வீடுகளில் மொத்தம் 39 மெகாவாட் திறனில்

சூரிய மின்சக்தியை வழங்கும் இலக்குடன் எனது அரசு இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் ₹ 3.01 கோடி மானியத்தில் இதுவரை 624 வீட்டின் கூரைகளில் சூரிய மின் கட்டமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

**63.** நமது ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து அரசு கட்டடங்களிலும் சூரிய சக்தி மூலம் மின் சக்தி உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 1,210 அரசு கட்டடங்கள் 27 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்திக்கு கண்டறியப்பட்டுள்ளன. சுமார் 500 அரசு கட்டடங்களில் 14 மெகாவாட் திறனுடைய சூரிய மின்நிலையம் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த மின் நிலையங்கள் அமைப்பதற்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேவை நிறுவனங்கள் மின்னனு ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படும். மீதமுள்ள 13 மெகாவாட்டுக்கு, மார்ச் 2025 இறுதிக்குள் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படும்.

**64.** மேலும், 2025-26ஆம் நிதியாண்டில், மூலதன திட்டங்கள் மூலம் கீழ்கண்டவற்றை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது:-

(i) வெவ்வேறு திறனுடைய 100 புதிய பகிர்ந்தளிக்கும் மின்மாற்றிகள்

(ii) 20 கிலோமீட்டர் நீளத்திற்கு புதிய உயர் மின் அழுத்தப் பாதைகளும், 100 கிலோமீட்டர் நீளத்திற்கு புதிய குறைந்த மின் அழுத்தப் பாதைகளும் அமைக்கப்படும்.

(iii) 10 கிலோமீட்டர் அளவிற்கு உயர் மின் அழுத்தப் பாதைகளும், 50 கிலோமீட்டர் அளவிற்கு குறைந்த மின் அழுத்தப் பாதைகளும் மேம்படுத்தப்படும்.

(iv) 10 தொழிற்சாலைகளுக்கு உயர் மின் அழுத்த இணைப்புகளும், 30 தொழிற்சாலைகளுக்கு குறைந்த மின் அழுத்த இணைப்புகளும் வழங்கப்படும். 50 விவசாய பம்ப் செட்டுகளுக்கும், 10,000 வீடுகள், 2,000 வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தெருக்களுக்கு 10,000 புதிய LED விளக்குகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட உள்ளன.

(v) 10 கிலோமீட்டர் தூரம் அளவிற்கு உயர் மற்றும் குறைந்த மின் அழுத்த புதை மின்வடங்கள் புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(vi) 100 குறைந்த மின் அழுத்த மேல் நிலை இணைப்புகள் புதை மின்வடங்களாக மாற்றுதல் ஆகிய பல்வேறு மின் உள்கட்டமைப்பு மூலதனப் பணிகள் நிறைவேற்றப்படவுள்ளன.

**65.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 2,904.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**66.** மீனவர்களின் நலனைக் காக்கவும், மீன்பிடி தொழிலுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் எனது அரசு பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**67.** மீனவ சமுதாயத்தை சேர்ந்த முதியோர்களுக்கு எனது அரசு ஓய்வூதியம் வழங்கி வருகிறது. நடப்பு நிதியாண்டில் 1,000 பயனாளிகள் புதியதாக இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு முதியோர் ஓய்வூதியம் பெறுவர் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்திற்காக ₹ 36.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**68.** பதிவு செய்யப்பட்ட விசைப்படகுகளின் உரிமையாளர்களுக்கு ₹ 70,000 மதிப்புடைய ஒட்டர் மீன்பிடி சாதனம்(Otter Boards) 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும். மேலும், ₹ 7,500 மதிப்புடைய குளிரூட்டும் பெட்டிகள் (Ice Box) இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் அரசுக்கு கூடுதலாக ₹ 2.63 கோடி செலவாகும்.

**69.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, 5 ஆண்டுகளாக குளங்களில் மீன் வளர்ப்பு தொழில் செய்யும் மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மீன்பிடிக் குளத்தை புதுப்பிக்க ஏக்கர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ₹ 50,000 வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**70.** மீனவர்கள் மேம்பாட்டு முகமையில் பதிவு செய்துள்ள 100 மீனவ பயனாளிகளுக்கு ₹ 12,000 மதிப்பிலான இழுவை வலை 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும். மீனவ பயனாளிகளுக்கு ஆழ்கடல் மீன்பிடி படகு 20 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படும்.

**71.** மீனவ பெண்களின் அதிகாரத்தை மேம்படுத்தும் பொருட்டு முதற்கட்டமாக 100 பாரம்பரிய மீனவ சமுதாய பெண்களுக்கு, நவீன தொழில்நுட்பம் கொண்ட சூரிய சக்தியுடன் இயங்கும் சிறிய அளவிலான 20 கிலோ கொள்ளளவு கொண்ட மீன் உலர்ப்பான் (Mini Solar Fish Dryer) வழங்கப்படும். முதியோர் ஓய்வூதியம் பெண் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த நபர்கள் இறக்க நேரின், அவரது குடும்பத்திற்கு ஈமச் சடங்கின் செலவிற்காக தற்போது வழங்கப்படும் ₹ 15,000-ஐ ₹ 20,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**72.** பிரதம மந்திரி "மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்" (PMMSY) ₹ 86.42 கோடி மதிப்பீட்டில் பெரிய காலாப்பட்டு, நல்லவாடு மற்றும் தேங்காய்திட்டு (அரிக்கன்மேடு) பகுதிகளில் மூன்று மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. காரைக்கால் பகுதியில் ₹ 119.94 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுகம் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படும். மேலும், மீன்பிடி படகுகள் துறைமுகத்திற்கு வந்து செல்ல ஏதுவாக ₹ 3.90 கோடி மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**73.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 132.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்**

**74.** எனது அரசு, அனைத்து மக்களுக்கும் எளிதாக மற்றும் தரமான பொது சுகாதார சேவை கிடைக்க சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

**75.** இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு மையத்தில் அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய, வார்டுடன் கூடிய உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக் கூடம் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆய்வகங்களை மேம்படுத்தும் பொருட்டு கீழ்க்காணும் உபகரணங்கள் நிறுவப்படும்:–

(i) முழுமையான தானியங்கி உயிர் வேதியியல் பகுப்பாய்வு (Fully Automated Bio-Chemistry Analyser with ISE);

(ii) முழுமையான தானியங்கி நோய் எதிர்ப்பு பகுப்பாய்வு (Fully Automated Immuno Analyser) ; மற்றும்

(iii) தானியங்கி மின்னாற்பகுப்பு அமைப்பு (Automated Electrophoresis System) நிறுவப்படும். எலும்பு முறிவு மற்றும் பிற விபத்துகளால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்காக வலி நிவாரண பிரிவு அமைக்கப்படும். மேலும், அறுவைச் சிகிச்சை மையங்களில் அத்தியாவசிய மற்றும் உயிர் காக்கும் உபகரணங்கள் நிறுவ ஆவண செய்யப்படும்.

**76.** செயற்கைமுறை கருத்தரித்தல் மற்றும் Laparoscopy மூலம் அறுவைச் சிகிச்சை செய்யும் நவீன உட்கட்ட அமைப்புகள் தொடங்கப்படும். பாகூர், தட்டாஞ்சாவடி, மண்ணாடிப்பட்டு, காட்டேரிக்குப்பம் மற்றும் கலித்தீர்த்தாள்குப்பம் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அங்குள்ள சுகாதார நல மையங்களுக்கு புதிதாக கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், காலாப்பட்டு ஆரம்ப சுகாதார நல மையத்தில், மருந்தகம் மற்றும் நோயாளிகள் காத்திருப்பு அறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோபாலன்கடை பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலனுக்காக அங்கு ஒரு புதிய துணை சுகாதார மையம் அமைக்கப்படும்.

**77.** மத்திய அரசின் “தேசிய ஆயுஷ் இயக்கம்” திட்டத்தின்கீழ், புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் இயங்கும் 28 ஆயுஷ் மையங்களில் தசைநார் நோய் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் மேற்கொள்ள ஆவண செய்யப்படும்.

**78.** புதுச்சேரி மகாத்மா காந்தி முதுநிலை பல் மருத்துவ கல்லூரியில் தற்போதுள்ள இளநிலை பல் மருத்துவ படிப்பின் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 110 ஆகும். இவற்றை பல் மருத்துவ கவுன்சில் ஒப்புதல் பெற்று 125-ஆக (15 இடங்கள்) உயர்த்த உத்தேசித்துள்ளது. இக்கல்லூரி வளாகத்தில், தேர்வு எழுதும்

மையத்துடன் கூடிய பல்நோக்கு அரங்கம் புதிதாக கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள் மேம்படுத்த ஆவண செய்யப்படும். மேட்டுப்பாளையம் ஆரம்ப சுகாதார மையத்தில் துணை பல் மருத்துவ பிரிவு தொடங்கப்படும்.

**79.** காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அம்பகரத்தூர், நல்லம்பல், கோட்டுச்சேரி மற்றும் வரிச்சிக்குடி ஆகிய பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 65KV ஜெனரேட்டர் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், காரைக்காலில் 12 ஆரம்ப சுகாதார மையங்களில் உள்ள ஆய்வகங்களில் தானியங்கி பகுப்பாய்வு (Semi Auto-Analyser) நிறுவப்படும்.

**80.** மாகி அரசு பொது மருத்துவமனையில் தற்போது இயங்கி வரும் விபத்து சிகிச்சைப் பிரிவின் (Trauma Care) கட்டுமான பணிகள் வரும் ஆண்டிற்குள் நிறைவு செய்யப்படும். அரசு பொது மருத்துவமனையில் Dialysis பிரிவு தொடங்கப்படும். மேலும், பல்லூர் பகுதியில் ₹ 8 கோடி செலவில் சமுதாய நல மையம் விரிவுபடுத்தும் பணி மேற்கொள்ளப்படும். மாகி பகுதியில் அமைந்துள்ள ராஜீவ் காந்தி ஆயுர்வேதா கல்லூரியில் ஆயுஷ் தொலை மருத்துவ (Telemedicine) வசதிகள் தொடங்கப்படும். மேலும், ₹ 1.68 கோடி மதிப்பீட்டில் நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய பொலிவுரு வகுப்பறைகள் (Advanced Digital Hybrid Smart Classroom) அமைக்கப்படும்.

**81.** ஏனாம் பகுதியில் அமைந்துள்ள பொது மருத்துவமனையின் புற நோயாளிகள் பிரிவு புனரமைக்கப்பட்டு கணினி மயமாக்கப்படும். மேலும், Dialysis பிரிவு தொடங்கப்படும். பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு CT Scan, OPG X-Ray machine, mobile X-Ray unit ஆகிய உபகரணங்கள் வாங்கப்படும். மேலும், தற்போது பயன்பாட்டில் உள்ள RNTCP, AIDS கட்டுப்பாடு, யானைக்கால் நோய் தொற்று, மலேரியா நோய் தொற்று, IDSP நோயியல் ஆய்வகங்கள் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**82.** மத்திய அரசின் பிரதம மந்திரி "ஆயுஷ்மான் பாரத் சுகாதார உட்கட்டமைப்பு இயக்கம்" திட்டத்தின்கீழ் ₹ 92 கோடி மதிப்பீட்டில்:-

(i) புதுச்சேரி இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு மையம்;

(ii) புதுச்சேரி இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்; மற்றும்

(iii) காரைக்கால் அரசு பொது மருத்துவமனை, ஆகிய மூன்று இடங்களில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Unit) தொடங்கப்படும்.

**83.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 1,086.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு**

**84.** எனது அரசு, திருக்கோயில்களின் ஒரு கால பூஜைக்காக தற்போது வழங்கப்பட்டு வரும் நிதியுதவியான ₹ 20,000-ஐ உயர்த்தி ₹ 30,000 ஆக வழங்க உத்தேசித்துள்ளது. மேலும், இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் வராத பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் ஆதிதிராவிட இன மக்கள் வசிக்கும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களின் புனரமைப்பிற்காக ₹ 3.50 இலட்சம் நிதியுதவி தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இதனை ₹ 5 இலட்சமாக உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**85.** இந்து சமய நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பல சிதிலமடைந்த திருக்கோயில்களை புனரமைக்கும் பொருட்டு இந்த நிதியாண்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஏனாம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுவாமி திருக்கோயிலின் புனரமைப்பு பணிக்கு நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**86.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 8.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில்கள் மற்றும் வணிகம்**

**87.** உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், ஏற்றுமதி மூலம் நாட்டின் அந்நியச் செலாவணி-க்குப் பங்களிப்புச் செய்யவும் தொழில் துறை ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது.

**88.** மத்திய அரசின் "சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் செயல்திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல்" (RAMP) திட்டத்தினை நமது புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் இயங்கும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு PIPDIC நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

**89.** தொழிற்சாலைகளில் ஜெனரேட்டர் நிறுவுவதற்கு தற்போது மானியம் வழங்கப்படுவது போல், பசுமை ஆற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு, தொழிற்சாலைகளில் சூரிய மின் தகடுகள் மற்றும் சூரிய மின் சக்தி சேமிப்பு கலன்கள் அமைக்க மானியம் வழங்கப்படும். தற்போது தொழிற்சாலைகளுக்கு வழங்கும் மானியம் போல், நவீன அரிசி ஆலைகளுக்கும் மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**90.** தேசிய ஜவுளிக் கழகத்தின் வசம் உள்ள சுதேசி-பாரதி பஞ்சாலையின் சொத்துக்களை திரும்ப பெரும் பொருட்டு இந்த நிதியாண்டில் ₹ 35.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்திய தொழில்துறை மேம்பாட்டு வங்கியின் (IDBI) வசம் உள்ள PIPDIC நிறுவனத்தின் 21.14 விழுக்காடு பங்குகள் அரசே பெற்றுக்கொள்ளும் பொருட்டு நடப்பு நிதியாண்டில் ₹ 19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**91.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 122.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்**

**92.** நவீன காலக்கட்டத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் சேவை பொது மக்கள் மற்றும் அனைத்து அரசு துறைகளுக்கும் இன்றியமையாததாக கருதப்படுகிறது. பொதுமக்களுக்கு அரசின் பல்வேறு சேவைகள் எளிதில் சென்றடைய எனது அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**93.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து பொது மக்களும் பயன்பெறும் வகையில் அவர்களது நலன் கருதி அரசின் 227 பல்வேறு சேவைகளை ஒருங்கிணைத்து அவற்றை பொது சேவை மையங்கள் மூலமாக வழங்கப்படுகிறது.

**94.** எனது அரசு பொது மக்கள் பயன்பெறும் பொருட்டு அனைத்து துறைகளிலும் கோப்புகள் விரைவாகவும் மற்றும் எளிய முறையில் ஒப்புதல் பெறவும் டிஜிட்டல் முறையை (e-Office)

செயல்பாட்டில் கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் கோப்புகளை எளிதில் தயாரிக்கவும், ஒப்புதல் பெறவும் மற்றும் பராமரிக்கவும் ஏதுவாக இருக்கும். மத்திய அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் வழிகாட்டுதலுக்கு இணங்க அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் பணி சம்பந்தமான தகவல்களை (Service Book) பராமரிக்க மின்னணு-மனிதவள மேம்பாட்டு செயலி (e-HRMS 2.0) நடைமுறைப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**95.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 16.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தொழிலாளர் நலம்

**96.** எனது அரசு அமைப்பு மற்றும் அமைப்புச் சாரா தொழிலாளர்களின் நலன்களையும் மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இவ்வாட்சிப்பரப்பில் பணிபுரியும் அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ₹ 2,000 வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**97.** தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு நலன் கருதி 1,000 தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை ஆய்வக அலுவலகம் மூலமாக முன் பாதுகாப்பு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், தரம் வாய்ந்த பயிற்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மத்திய பொது பணியாளர் தேர்வாணையம் (UPSC), பணியாளர் தேர்வு ஆணையம் (SSC), இரயில்வே வேலைவாய்ப்பு வாரியம் (RRB) மற்றும் ஏனைய அரசுத் துறை நடத்தும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்க சிறப்பான கட்டணமில்லா பயிற்சி அளிக்கப்படும்.

**98.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள படித்த இளைஞர்கள், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் அவர்களது திறனை மேம்படுத்தும் பொருட்டு முதலமைச்சர் திறன் மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் 30,000 இளைஞர்கள் பயன்பெறுவர்.

**99.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 48.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி**

**100.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் தூய்மையை பராமரிப்பதில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மாண்புமிகு அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர். பாண்டிச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மூலம் வீடுகளில் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு புதிய தொழில்நுட்ப உதவியுடன் மறு சுழற்சி செய்யப்படுகிறது.

**101.** அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ்:-

(i) புதுச்சேரி, வில்லியனூர் பகுதியில் 3 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்;

(ii) புதுச்சேரி பகுதியில் உள்ள கனகன் ஏரி, தக்கக்குட்டை, சேதராப்பட்டு, தொண்டமாநத்தம், கூடப்பாக்கம், கோபாலன்கடை, இராமநாதபுரம் மற்றும் காரைக்கால் பகுதியில் உள்ள சேனியார் குளம், ஹைதர் பள்ளிக் குளம், புதுக்குளம், ஒப்பில்லாமணியர் திருக்கோயில் குளம் மற்றும் தளத்தெரு பெரியகுளம் முதலிய பகுதிகளில் உள்ள குளங்கள் ₹ 5.22 கோடி மதிப்பீட்டில் சீரமைத்தல்; மற்றும்

(iii) மாகி நகராட்சிப்பகுதிக்கு உட்பட்ட வளமரைக் குளத்தை மேம்படுத்துதல் ஆகிய பல்வேறு திட்டப் பணிகள் வரும் நிதியாண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**102.** தற்போது வழங்கப்பட்டு வரும் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியை ₹ 2 கோடியிலிருந்து ₹ 3 கோடியாக உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**103.** புதுச்சேரி உழவர்கரை நகராட்சிக்குட்பட்ட கிழக்கு கடற்கரை சாலை பகுதியில் அமையவிருக்கும் புதிய பேருந்து நிலையத்திற்கு “அடல் பிஹாரி வாஜ்பாய் பேருந்து நிலையம்” என்று பெயர் சூட்டப்படும். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ₹ 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**104.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 384.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொலிவுரு நகரம்**

**105.** புதுச்சேரி நகரப்பகுதியில் பொலிவுரு நகரத் திட்டத்தின்கீழ் பல்வேறு நகர உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**106.** பொலிவுரு நகரத் திட்டப் பணிகளில்

(i) 23 கோடி மதிப்பீட்டில் பெரிய வாய்க்கால் புனரமைத்தல்;

(ii) ₹ 55 கோடி மதிப்பீட்டில், கடலூர் சாலையில் AFT ஆலை அருகே இரயில்வே மேம்பாலம் அமைத்தல்;

(iii) புதுச்சேரி நகரத்தின் பெருமையை பறைசாற்றும் பாரம்பரிய கட்டடங்களை புனரமைக்கும் நோக்கில் ₹ 9 கோடி மதிப்பீட்டில் பென்ஷனேட் பள்ளியை பழமை மாறாமல் புனரமைத்தல்;

(iv) புதுச்சேரி நகரப் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை வசதிகளின் தற்போதைய நிலைமையை ஆய்வு செய்து ₹ 52.50 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்பு செய்தல்; மற்றும்

(v) பொதுமக்களின் பயன்பாட்டிற்காக போக்குவரத்து, சுகாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு தரவுகளை உள்ளடக்கிய “ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம்“ ₹ 99.63 கோடி மதிப்பீட்டில் அமைத்தல் ஆகிய பணிகள் எதிர்வரும் நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.

**காவல்**

**107.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து அதன் மூலம் அனைத்து மக்களும் அமைதியான மற்றும் பாதுகாப்பான சூழலில் வாழ வழி செய்வதே எனது அரசின் முக்கிய கடமையாக கருதப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இதற்குண்டான அனைத்து வழிமுறைகளையும் செவ்வனே எனது அரசு செய்து வருகிறது.

**108.** காவல் துறையின் பணிகள் சிறப்பாக செயல்படவும் அதன் மூலம் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவும் காவல் துறைக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் நவீன உபகரணங்களான Wireless சாதனங்கள், வாகனங்கள் மற்றும் ஏனைய கருவிகள் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. காவல் துறையில் உள்ள அனைத்து உட்கட்டமைப்பு பணிகளும் மேம்படுத்தப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். மேலும், IRBn-க்கு தனி அலுவலக கட்டடம் கட்டப்படும். மேலும், தற்போது பணியாற்றும் காவலர்கள் மற்றும் காவல் துறையை சேர்ந்த அதிகாரிகளை ஊக்குவிக்கும் பொருட்டு மற்றும் அவர்கள் தங்கள் பணியை மேலும் செவ்வனே செய்ய ஏதுவாக அவர்களுக்கு காலத்தோடு பதவி உயர்வு வழங்கப்படும்.

**109.** புதுச்சேரி சோலைநகர் பகுதியில் அமைந்துள்ள புறக்காவல் நிலையம் காவல் நிலையமாக தரம் உயர்த்தப்படும். மேலும், பத்துக்கண்ணு கிராமப்பகுதியில் ஒரு புதிய காவல் நிலையம் உருவாக்கப்படும்.

**110.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 401.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறைத்துறை**

**111.** புதுச்சேரி காலாப்பட்டு பகுதியில் அமைந்துள்ள மத்திய சிறைச்சாலையில் உள்ள சிறைக் கைதிகளின் அனைத்து தகவல்களும் மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் கணினி மயமாக்கப்பட்டு டிஜிட்டல் முறையில் பராமரிக்கப்படும். இதன் மூலம் சிறைக் கைதிகளின் அனைத்து தகவல்கள் துல்லியமாகவும் உடனுக்குடன் தெரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும். மேலும், சிறைக் கைதிகளில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களின் நலனிற்காக "ஏழை சிறைக் கைதிகள் நலத்திட்டம்" நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் ஏழைக் கைதிகளுக்குத் தேவைப்படும் சட்ட உதவி, திறன் மேம்பாட்டு பயிற்சி முதலியன வழங்கப்படும்.

**112.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 16.99 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு**

**113.** தீயணைப்புத் துறையின் சேவை, தீயணைப்பு மற்றும் பேரிடர்மீட்பு காலங்களில் இன்றியமையாத ஒன்றாகும். இத்துறையின் சேவையை மேலும், மேம்படுத்த தேவையான அனைத்து நவீன உபகரணங்களான வான் தூக்கிகள் (Sky lift), தீ பாதுகாப்பு உடைகள், காண்கிரிட் கட்டர்கள், ஏர் கம்ப்ரசர், ப்ரொஜக்டர் மற்றும் டிஜிட்டல் கேமரா கொண்ட மடிக்கணினிகள் போன்றவை கொள்முதல் செய்யப்படும். இதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ₹ 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தீயணைப்பு துறையில் காலியாக உள்ள தீயணைப்பு நிலைய அதிகாரி, தீயணைப்பு வீரர்கள், தீயணைப்பு வாகன ஓட்டுநர் ஆகிய பணியிடங்களுக்குப் போட்டித் தேர்வு நடத்தப்பட்டுள்ள நிலையில், சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு பணி ஆணைகள் விரைவில் வழங்கப்படும். மேலும், ஊழியர்களுக்கு பணிமூப்பு அடிப்படையில் காலதாமதம் இன்றி பதவி உயர்வுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**114.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 40.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**துறைமுகம்**

**115.** சரக்கு கப்பல்கள் மற்றும் மீன்பிடி படகுகள் புதுச்சேரி துறைமுகத்தில் எளிதல் சென்று வரும் வண்ணம் துறைமுக முகத்துவாரத்தை ஆழ்படுத்தும் பணிகள் விசாகப்பட்டினத்தில்

அமைந்துள்ள இந்திய தூர்வாரும் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது. துறைமுகத்திற்குச் சொந்தமான மண்வாரிக் கப்பலை பராமரிப்புப் பணிகள் செய்து துறைமுகக் கால்வாய் பகுதிகளை ஆழப்படுத்தும் பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும். இதன் மூலம் இரண்டு இலட்சம் கன மீட்டர் மணல் தூர்வாரப்படும். இது மூன்றாண்டு காலத்திற்கு மீன்பிடி படகுகளின் தங்கு தடையற்ற போக்குவரத்திற்கு வழிவகுக்கும்.

**116.** புதிய துறைமுகத்தில் தற்போதுள்ள சரக்கு சேமிப்பு அறை ஒன்றை (Godown) சீரமைத்து, அதில் கப்பல் பயணிகளுக்கான வசதிகளை ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும். பழைய துறைமுகத்தில் பயணியர் முனையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**117.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 21.41 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொதுப்பணிகள்**

**118.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் பொருளாதார வளர்ச்சியைத் ஊக்குவிப்பதற்கும் நமது மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான செலவீனம் முக்கியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனது அரசு தற்போதுள்ள சொத்துகளை பராமரிப்பதுடன்,

சாலைகளை மேம்படுத்துதல், குடிநீர் வழங்கல் அமைப்பை மேம்படுத்துதல், கழிவுநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறது.

**119.** மாண்புமிகு துணைநிலை ஆளுநர் அவர்கள் இந்த மாண்புமிகு அவையில் ஆற்றிய உரையில் கூறியுள்ளபடி, ₹ 123.25 கோடி மதிப்பீட்டில் AFD நிதி உதவியுடன் 14 குழாய் கிணறுகள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல் மற்றும் வில்லியனூர் மற்றும் அமைதி நகரில் குடிநீர் வழங்கள் குழாய்களை மாற்றுதல் ஆகிய குடிநீர் வழங்கல் பணிகளுக்கான ஒப்புதல்கள் வழங்கப்பட்டு, ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்பதை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டத்தை புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் அனைத்து குடிமக்களுக்கும் பாதுகாப்பான மற்றும் தரமான குடிநீர் வழங்கலை உறுதி செய்யும் பொருட்டு ₹ 534 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த எனது அரசு உறுதிபூண்டுள்ளது.

**120.** சாலை மற்றும் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள் உட்பட ஒட்டு மொத்த உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு அடித்தளம் அமைக்கும் வகையில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் ₹ 4,750 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்த மத்திய அரசின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மத்திய வீட்டுவசதி மற்றும்

நகர்ப்புற அமைச்சகம், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் இதற்கான ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில் தற்போது நிதி ஆயோக் மற்றும் உள்துறை அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது.

**121.** இராஜீவ் காந்தி சதுக்கத்திலிருந்து இந்திரா காந்தி சதுக்கம் வரை ஒற்றை அடுக்கு உயர்மட்ட மேம்பாலம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை ₹ 839.77 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக 10-03-2025 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**122.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் நான்கு பிராந்தியங்களிலும் பல்வேறு உள்கட்டமைப்பு பணிகளை ₹ 171.98 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நபார்டு வங்கி ஒப்புதல் வழங்கியுள்ளது. அனைத்து பிராந்தியங்களிலும் ₹ 99.38 கோடி மதிப்பிலான பல்வேறு சாலை உள்கட்டமைப்பு திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும், ஆலங்குப்பம், சஞ்சீவி நகர் மற்றும் வீராம்பட்டினத்தில் ₹ 33.32 கோடி மதிப்பிலான மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. புதுச்சேரியில் பாதுகாப்பான குடிநீருக்காக ₹ 81.10 கோடி மதிப்பீட்டில் உவர்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மற்றும் முத்தியால்பேட்டை நீர் வழங்கல் திட்டத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்கான ஒப்பந்த புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன.

**123.** மத்திய அரசின் அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ₹ 16 கோடி மதிப்பீட்டில் காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள நேரு நகர் மற்றும் தலத்தெரு பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய் அமைத்தல் மற்றும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை முடியும் தருவாயில் உள்ளது. மேலும், ₹ 81.53 கோடி மதிப்பீட்டில், புதுச்சேரியில் 15 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காரைக்கால் பகுதியில் 11 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் எதிர்வரும் நிதியாண்டில் நிறைவடையும்.

**124.** மத்திய அரசின் ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் ₹ 10.40 கோடி மதிப்பீட்டில் நெடுங்காடு, அக்கம்பேட்டை, முதலிமேடு கிராமங்களில் நடைபெற்று வரும் குடிநீர் மேம்பாட்டு பணிகள் விரைவில் நிறைவடையும்.

**125.** பிரதம மந்திரி கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (PMGSY) மத்திய பங்கு 60 விழுக்காடு மற்றும் மாநில பங்கு 40 விழுக்காடு நிதிப் பகிர்வு விகிதத்தில் ₹ 60 கோடி திட்ட மதிப்பீட்டில் புதுச்சேரி ஊரகப் பகுதிகளில் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மத்திய சாலை உட்கட்டமைப்பு நிதியில் (CRF) ₹ 20 கோடி மதிப்பீட்டில் காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**126.** மாகி பகுதியில் ₹ 9.96 கோடி மதிப்பீட்டில் உள் சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் ஆற்றங்கரை ஓர சாலை அமைக்கும் மீதமுள்ள பணிகள் எதிர்வரும் நிதியாண்டில் நிறைவடையும்.

**127.** ஏனாம் பிராந்தியத்தில் ₹ 8.78 கோடி மதிப்பீட்டில் 5 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், ஏனாம், மெட்டகுர் பகுதியில் 6 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும். மத்திய அரசின் நிதியுதவியுடன் ஏனாம் பகுதியில் ₹ 199.71 கோடி மதிப்பீட்டில் வெள்ள தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**128.** புதுச்சேரி துணை-நிலை ஆளுநரின் மாளிகை மிகவும் பழமை வாய்ந்ததாகவும், பல இடங்கள் சிதிலமடைந்து உள்ளதால், அதன் பழமை மாறாமல் புதிய மாளிகை கட்டப்படும். இதற்காக 2025-26ஆம் நிதியாண்டில் ₹ 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**129.** 2025-26ஆம் நிதியாண்டில் பொதுப்பணித் துறைக்கு ₹ 845.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**நில அளவை மற்றும் பதிவேடுகள்**

**130.** இந்திய நில அளவைத் துறையின் தொழில்நுட்ப உதவியுடன் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மறு நிலஅளவை ட்ரோன் சர்வே மூலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்திய நில அளவைத் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ட்ரோன் மற்றும் நவீன தொழில்நுட்பம் மூலம் மறு நில அளவை பணிகள் மேற்கொண்ட பிறகு ஒவ்வொரு நில உரிமையாளர்களுக்கும் தனித்துவமான நிலப்பகுதிக்குரிய அடையாள எண் (ULPIN) வழங்கப்படும்.

**131.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 13.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்**

**132.** புதுச்சேரி மாநில மக்களின் சுகாதாரமான வாழ்க்கை நடைமுறைக்கு சுற்றுச்சூழலைப் பேணிக்காப்பது மிகவும் அவசியமானதாகும். தற்போது இத்துறையானது ஏனைய திட்டங்கள் மூலம் சுற்றுச்சூழலை மேம்படுத்த வழிவகை செய்கிறது.

**133.** உலக வங்கியின் கடனுதவியுடன் புதுச்சேரி மாநிலத்தில் ₹ 1,433 கோடி மதிப்பீட்டில் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் கடலோர சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், பராமரிக்கவும்

“நீடித்து நிலைத்திருக்கும் கடல் வளம் மற்றும் பொருளாதாரம்” (PY-SHORE) திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளது. இத்திட்டம் கடலோர மீன்தன்மையை மேம்படுத்துவதையும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் புதுச்சேரியின் கடலோர பொருளாதாரத்தை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கான திட்ட முன் மொழிவு தயாரிக்கப்பட்டு நிதித்துறையின் பொருளாதார விவகார அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**134.** மாசு கட்டுப்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு இவ்வாட்சிப்பரப்பில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழியை (Plastic) முழுமையாக நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து பெரிய அளவிலான ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளையும் மாசு கட்டுப்பாடு சம்பந்தமாக தொடர்ச்சியாக கண்காணிக்கப்படும். அனைத்து வியாபார இடங்களிலும் துணிப் பைகள் வழங்கும் இயந்திரம் அமைக்கப்படும்.

**135.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 20.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகர மற்றும் கிராம திட்டமிடல்**

**136.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் வளர்ச்சிக்கு நகர மற்றும் கிராம திட்டமிடல் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து குடிசை வீடுகளையும் கல் வீடுகளாக மாற்றுவது எனது அரசின் முக்கிய நோக்கமாகும்.

**137.** புதுச்சேரி பகுதியில் அமைந்துள்ள அருந்ததிபுரம், சின்னப்பொய்கை ஆகிய இடங்களில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை ₹ 1.70 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்படும். மேலும், புதுச்சேரி அரியாங்குப்பம், சுப்பையா நகர் மற்றும் காரைக்கால், காரைக்கோவில்பத்து பகுதிகளில் உள்ள உட்புற சாலைகள் மற்றும் கழிவு நீர் வாய்க்கால் ₹ 2 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**138.** பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் தற்போது கட்டப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ள 3,300 வீடுகளும் 2025-26ஆம் நிதியாண்டிற்குள் கட்டி முடிக்கப்படும். காரைக்கால் பகுதியில் உள்ள அன்பு நகரில் 250 குடியிருப்புகளுக்கு பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் 2.0-ன் கீழ் (நகர்புறம்) கட்டுமான பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் பெறப்படும்.

**139.** பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் 2.0, (நகர்புறம்) பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு வீட்டு வசதித் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பொதுப்பிரிவு மற்றும் பிற்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கு மத்திய அரசின் பங்கு ₹ 2.25 இலட்சம் ஆகும். இவற்றுடன் மாநில அரசின் பங்காக தற்போது வழங்கப்பட்டு வரும் ₹ 2 இலட்சத்தை ₹ 2.75 இலட்சமாக உயர்த்தி மொத்தம் ₹ 5 இலட்சம் வழங்கப்படும்.

**140.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 88.67 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

**141.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் பாரம்பரிய பெருமை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலா துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது புதுச்சேரி மாநிலத்தின் இயற்கை எழில் மற்றும் கலாச்சார சிறப்பம்சங்களை கண்டுகளிக்க சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை கணிசமான முறையில் அதிகரித்து வருகிறது என்பதை அனைவரும் அறிவர். இவர்களின் அடிப்படைத் தேவையைக் கருத்தில் கொண்டு பல்வேறு சுற்றுலா மேம்பாட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**142.** புதுச்சேரி, மணப்பட்டு கிராமத்தில் உள்ள 100 ஏக்கர் நிலத்தில் பல்நோக்கு சுற்றுலா அம்சங்கள் நிறைந்த மண்டலம் உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளும் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் அரசு-தனியார் பங்களிப்புடன் தீம் பூங்காக்கள், ஓய்வு விடுதிகள், மாநாட்டுக் கூடங்கள், நல மையங்கள் அமைக்கப்பட உள்ளது.

**143.** புதுச்சேரி பகுதியின் முதன்மை திட்டத்தில் ஆலங்குப்பம் ஏரி மேம்படுத்தும் பணிகள் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான கருத்துரு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் எதிர் வரும் நிதி ஆண்டில் முடிக்கப்பட்டு மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் ஒப்புதல் பெற்று மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

காரைக்கால் TR பட்டினம் ஆறு மற்றும் முகத்துவாரத்தில் சூழல் மற்றும் சாகச சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் 2025-26ஆம் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கான கருத்துரு அறிக்கை மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**144.** எதிர்வரும் நிதியாண்டில் சாகச விளையாட்டுகள், உணவுத் திருவிழா, கடற்கரைத் திருவிழா, காரைக்கால் கார்னிவல், புத்தாண்டு கொண்டாட்டம், பிரெஞ்சு தூதரகத்துடன் இணைந்து பிரெஞ்சு திருவிழா ஆகியவை கொண்டாடப்படும். மேலும், தேசிய சுற்றுலா தினத்தைக் கொண்டாடும் வகையில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த அரசு பள்ளி மாணவர்களுக்கு கல்வி சுற்றுலா மேற்கொண்டது போல், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கும் உலக சுற்றுலா தினம்-2025 கொண்டாடும் வகையில் கல்விச் சுற்றுலா மேற்கொள்ளப்படும். வரும் நிதியாண்டு முதல் பொங்கல் சுற்றுலா பொருட்காட்சி புதுச்சேரியில் பிரம்மாண்டமாக நடத்தப்படும்.

**145.** புதுச்சேரியில் அமைந்துள்ள விமான நிலையத்தின் ஓடுதளத்தை விரிவுபடுத்துவதற்காக, நிலம் கையகப்படுத்தும் பொருட்டு முதற்கட்டமாக ₹ 20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**146.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 72.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

**147.** பசுமை இயக்கக் கொள்கை விரைவில் அறிவிக்கப்படும். இது பசுமை தொழில்நுட்பங்களை விரைவாக ஏற்றுக்கொள்வதற்கு தேவையான உத்வேகத்தை வழங்கும். மின்சார மற்றும் ஹைபிரிட் (Hybrid) வாகனங்கள் போன்றவை புதுச்சேரியின் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்துக்கு மாறுவதை துரிதப்படுத்தும். மின் வாகன பயன்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு புதுச்சேரி ஆட்சிப்பரப்பிற்கான மின்-வாகனங்களை வாங்குவதற்கு மானியம் வழங்குவதுடன், அத்தகைய வாகனங்களைப் பதிவு செய்யும் போது சாலை வரியில் 50 விழுக்காடு சலுகையும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**148.** பிரதம மந்திரியின் மின் பேருந்து திட்டத்தின், மொத்த செலவு ஒப்பந்தத்தின்கீழ் (GCC) 75 மின்சார பேருந்துகளை இயக்குவதற்கு புதுச்சேரி அரசு முன்மொழிவை சமர்ப்பித்தது. தற்போது இந்திய அரசு ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்துள்ளது. இதற்கான புதுச்சேரி அரசின் ஒப்புதல் இந்த மாதத்திற்குள் தெரிவிக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், புதுச்சேரியில் 9 மீட்டர் நீள்முள்ள 25 மின்சார பேருந்துகள் மற்றும் 12 மீட்டர் நீளமுள்ள 50 மின்சார பேருந்துகள் இயக்கப்படும். இதன் மூலம் புதுச்சேரி சாலைப் போக்குவரத்து கழகத்தின் மூன்றில் இரண்டு பங்கு பேருந்துகள் மின்மயமாக்கப்படும். மத்திய அரசு ₹ 8.15 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி மேட்டுப்பாளையம் பகுதியில் மின்-பணிமனை

நிறுவுவதற்கும், மின் அளவி உள்ளிட்ட உள்கட்டமைப்பு பணிகளுக்கு அனுமதி அளித்துள்ளது. மேலும் ₹ 10 கோடி செலவில் நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பு மற்றும் தானியங்கி கட்டண வசூல் முறையை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது, இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

**149.** புதுச்சேரி சாலைப் போக்குவரத்து கழகத்தின் மூலம் நீண்ட தூர வழித்தடங்களுக்கு 10 மிதவைப் பேருந்துகளை இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. காரைக்கால் பகுதிக்கு 10 மின்சார பேருந்துகளையும், மாகி மற்றும் ஏனாமிற்கு பிராந்தியத்திற்கு 9 மீட்டர் நீளமுள்ள தலா 5 பேருந்துகளையும் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**150.** புதுச்சேரி நகரப்பகுதிகளில் பொலிவுறு நகரத் திட்டத்தின்கீழ் 38 மின்சார இழுப்பு வண்டிகள் (e-Rickshaws) மற்றும் 25 மின்சார பேருந்துகள் இயக்கப்படும். மேலும், 15 நவீன பேருந்து நிறுத்தங்கள் மார்ச் 2025க்குள் அமைக்கப்படும்.

**151.** காற்று மாசுபடுதலை கட்டுப்படுத்தும் பொருட்டும் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் தற்போது புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் பொதுப் போக்குவரத்துக்காக இயக்கப்பட்டு வரும் டெம்போக்களுக்கு மாற்றாக வாங்கப்படும் இயற்கை எரிவாயு (CNG) மூலம் இயங்கும் டெம்போக்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.

**152.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 69.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்**

**153.** எனது அரசு சமூக-பொருளாதாரத்தில் பின் தங்கிய குறிப்பாக ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களின் நலனை பாதுகாக்க அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது என்பதை மாண்புமிகு அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த ஆண்டு சிறப்புக் கூறு திட்ட நிதியாக (SCSP) ₹ 526.82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**154.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பைச் சேர்ந்த 30 வயதினைக் கடந்து திருமணம் ஆகாத, கணவரை இழந்த மற்றும் வேலையற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிருக்கு மாதம் ₹ 3,000 நிதி உதவி இவர்கள் திருமணம் / வேலைக்கு செல்லும் வரை வழங்கப்படும்.

**155.** ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த முதியோர், விதவை, முதிர்கன்னி மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு தற்போது வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியத்துடன் ₹ 500 கூடுதலாக வழங்கப்படும்.

**156.** தாய் மற்றும் தந்தை இருவரையும் இழந்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு 18 வயது முடியும் வரை அவர்களது கல்வி மற்றும் அடிப்படைத் தேவைகளுக்காக மாதம் ₹ 5,000 வழங்கப்படும்.

**157.** ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து போன்ற பயிற்சிக்கு உதவித்தொகையாக மாதம் ₹ 500 மற்றும் கணிணி பயிற்சி வகுப்பிற்காக ₹ 1,000 அவர்களது பயிற்சி காலம் முடியும் வரை அல்லது ஒரு வருட காலம் இவற்றில் எது முந்தையதோ அதுவரை வழங்கப்படும்.

**158.** விடுதியில் தங்கி கல்வி கற்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு தங்களது திறன் மேம்பாடு மற்றும் ஆங்கில மொழி ஆற்றலை வளர்க்கும் பொருட்டு இலவசமாக பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

**சமூக நலம்**

**159.** எனது அரசு மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் நலிவடைந்த வகுப்பினர் ஆகியோரின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், மாற்றுத்திறனாளிகள் இதர நபர்களைப் போல் அனைத்திலும் சமமான வாய்ப்பினை பெறுகின்ற அளவில் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**160.** மாற்றுத்திறனாளிகள் இறக்க நேரிட்டால், ஈமச்சடங்கிற்காக அவர்களது நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியான ₹ 15,000-ஐ உயர்த்தி ₹ 25,000-ஆக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநில விருதுக்கான ரொக்கப் பரிசுத் தொகை ஒவ்வொரு பிரிவிற்கும் ₹ 10,000 உயர்த்தி வழங்க ஆவன செய்யப்படும்.

**161.** எலும்பியல் குறைபாடு உள்ளவர்களுக்கு சிறப்பு மூன்று சக்கர மோட்டார் பொருத்திய வாகனம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு இணையாக முதுகுத்தண்டு பாதிப்பு உள்ள நபர்களுக்கும் சிறப்பு மூன்று சக்கர மோட்டார் பொருத்திய வாகனம் வழங்க ஆவன செய்யப்படும்.

**162.** தற்பொழுது மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை வருடத்திற்கு ஒருமுறை ₹ 1,000; ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை வருடத்திற்கு ₹ 2,000; ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை வருடத்திற்கு ₹ 3,400; வழங்கப்பட்டு வருகிறது. இவற்றை முறையே ஆண்டுக்கு ₹ 4,000, ₹ 5,000, மற்றும் ₹ 6,400 ஆக உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**163.** இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தற்பொழுது ஆண்டிற்கு ₹ 5,000 வழங்கப்படும் உதவித் தொகை உயர்த்தி ₹ 8,000-ஆக வழங்க ஆவன செய்யப்படும். மேலும், முதுகலை மற்றும் தொழிற்சார் பட்டப்படிப்பு

பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தற்பொழுது ஆண்டிற்கு ₹ 6,800 வழங்கப்படும் உதவித் தொகை உயர்த்தி ₹ 9,800ஆக வழங்க ஆவன செய்யப்படும்.

**164.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 134.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விடுதலைப் போராட்ட வீரர்கள் நலம்**

**165.** விடுதலைப் போராட்ட வீரர்களைக் கௌரவிக்கும் விதமாக புதுச்சேரி அரசானது புதுச்சேரி விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் அளித்து வருகிறது. மத்திய அரசின் சுதந்திர போராட்ட வீரர்களின் ஓய்வூதிய திட்டத்தில் உள்ளது போல் விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்ப ஓய்வூதியத்தை அவர்களது இறப்பிற்கு பின்னர் அவர்களைச் சார்ந்து வாழும் திருமணம் ஆகாத மகளிருக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**166.** 2025-26ஆம் நிதியாண்டில் இதற்காக ₹ 17.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்**

**167.** எனது அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலனை காக்க மற்றும் அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்த பல்வேறு நலத் திட்டங்களை செய்து வருகிறது.

தற்பொழுது பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச மிதிவண்டி மற்றும் சுய தொழில் புரிபவர்களுக்கு வழங்கும் உபகரணங்கள் தொடர்ந்து வழங்கப்படும். புதுச்சேரி பகுதியில் உள்ள வில்லியனூர் மற்றும் காமராஜ் நகரில் பிற்படுத்தப்பட்ட மாணவிகள் தங்கும் விடுதிகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**168.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 16.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு**

**169.** எனது அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனைப் பேணுவதற்காக தற்பொழுது நடைமுறையில் உள்ள நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தும்.

**170.** இவ்வாட்சிப்பரப்பில் 21 வயது பூர்த்தியடைந்து 55 வயது மிகாமல் இருக்கும் அரசின் எவ்விதமான மாதந்திர உதவித் தொகையும் பெறாத வறுமைக் கோட்டிற்குகீழ் வசிக்கும் அனைத்து குடும்ப தலைவிக்கும் மாதம்தோறும் தலா ₹ 1,000 வழங்கப்படுகிறது. இது குடும்பத் தலைவிகளின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள ஏதுவாக உள்ளது. எனவே எனது அரசு 2025-26ஆம் நிதியாண்டுமுதல் இவ்வுதவித் தொகையை 2,500ஆக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**171.** இவ்வாட்சிப்பரப்பில் இயங்கும் அனைத்து அங்கன்வாடி மையங்களும் சிறப்புடன் செயல்பட அதற்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய பொருட்கள் / உபகரணங்கள் வழங்கப்படும். மேலும், 11 புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கும் மற்றும் 28 அங்கன்வாடி மையங்களை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய அரசின் "திறன்மிகு அங்கன்வாடி" திட்டத்தின்கீழ் 65 தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கன்வாடி மையங்களின் தரம் உயர்த்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**172.** இவ்வாட்சிப்பரப்பில் உள்ள நான்கு பிராந்தியங்களிலும் சிறார்களுக்கான காப்பகம் மற்றும் குழந்தை பராமரிப்பு மையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் குழந்தைகள் நலக் குழுமம் மற்றும் இளஞ்சிறார் நீதிக் குழுமம் மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள பேருந்து மற்றும் இரயில் நிலையங்களில் குழந்தைகள் உதவி மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**173.** 2025-26ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ₹ 786.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொது**

**174.** எனது அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறையின் மூலம் ஓய்வூதியம் பெறும் அனைத்து பிரிவினருக்கும் ₹ 500 உயர்த்தி வழங்க உத்தேசித்துள்ளது.

**175.** வருவாய் துறை, உள்துறை, கல்வித் துறை, வேளாண் துறை, சுகாதாரத் துறை, மின் துறை, கலை மற்றும் பண்பாட்டுத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் காலியாக உள்ள துணை வட்டாட்சியர், கிராம நிர்வாக அதிகாரி, கிராம உதவியாளர், துணை காவல் ஆய்வாளர், காவலர், கடலோர ஊர்க்காவல் படையினர், விரிவுரையாளர், பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் (மொழி), பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் (பாடப்பிரிவு), தொடக்க பள்ளி ஆசிரியர், மழலைப் பள்ளி நடத்துநர், வேளாண் அதிகாரி, மருந்தாளர், ECG டெக்னிசியன், மகப்பேறு உதவியாளர், சுகாதார உதவியாளர், இளநிலைப் பொறியாளர், கட்டுமான உதவியாளர், நூலக தகவல் உதவியாளர், இளநிலை நூலக தகவல் உதவியாளர், உதவியாளர், மேல்நிலை எழுத்தர், இளநிலை எழுத்தர் உள்ளிட்ட 2,298 பணியிடங்கள் நடப்பு நிதியாண்டில் நிரப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**176.** தாய் அல்லது தந்தையை இழந்து வாடும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி, எனது அரசு கீழ்க்காணும் உதவித்தொகையினை வழங்க உத்தேசித்துள்ளது:-

(i) 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை ₹ 2,000மும்,

(ii) 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை ₹ 3,000மும் மற்றும்

(iii) 11ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை ₹ 4,000மும் உதவித் தொகையாக மாதந்தோறும் வழங்கப்படும்.

**177.** அரசு சார்பு மருத்துவ கல்வி நிறுவனங்கள், வேளாண் கல்லூரி, கால்நடைக் கல்லூரி, அரசு உதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் நிலுவையில் உள்ள ஊதியத்திற்காக கூடுதலாக ₹ 45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**178.** அரசு பொதுத்துறை நிறுவனங்களான AFT, SBTML, PAPSCO மற்றும் PASIC ஆகியவற்றின் நிலுவையில் உள்ள சம்பளம் மற்றும் கடன்களை திருப்பி செலுத்தும் பொருட்டு 2025-26ஆம் நிதியாண்டில் ₹ 88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**179.** புது டில்லியில் தற்போதுள்ள புதுச்சேரி விருந்தினர் மாளிகையின் விரிவாக்கப் பணிகளுக்காக டில்லி வளர்ச்சிக் கழகத்திடம் (Delhi Development Authority) இருந்து நிலம் வாங்குவதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ₹ 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நிறைவுரை**

**180.** மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது எனது அரசின் முக்கிய கடமையாகும். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து தரப்பு மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில் அனைத்து துறைகளிலும் வெளிப்படையான

நிர்வாகத்தின் வாயிலாக குழந்தைகள், மகளிர், மாணவச் செல்வங்கள், முதியோர், மாற்றுத்திறனாளிகள், ஆதி திராவிட மற்றும் பழங்குடியினத்தவர், பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் அனைத்து பிரிவினரும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன் மூலம் இம்மாநில சமூக-பொருளாதார வளர்ச்சி மேம்பட வழிவகுக்கிறது.

**181.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, தனிநபர் வருமானம் உயர்ந்து நமது பொருளாதாரம் முன்னேற்றம் அடைவதற்கு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, அரசின் பல்வேறு மூலதன பணிகள்/ சொத்துக்கள், அரசு சார்பு நிறுவனங்களின் மூலதன சொத்துக்கள் உருவாக்கும் பொருட்டு அளிக்கும் கொடை ஆகியவற்றிற்காக கடந்த ஆண்டைவிட இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதலாக ₹ 300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**182.** நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதே வேளையில் மாநிலத்தின் நிதிப்பற்றாக்குறை, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில்(GSDP) நிலுவையில் உள்ள மொத்தக் கடன் விகிதம் ஆகியவை அனுமதிக்கப்பட்ட அளவுக்குள்ளேயே உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலத்தின் நிதி நிலைமையை மேம்படுத்த வழிவகைச் செய்யவும் விரைவான

பொருளாதார வளர்ச்சி அடையவும் அனைத்து வகையான நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதை இந்த மாண்புமிகு அவையின் உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**183.** இந்த நிறைவுரையுடன், 2025-26ஆம் நிதி ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தை இந்த மேலான பேரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கின்றேன்.

***வாழ்க பாரதம் !***

***வளர்க புதுச்சேரி !!***

***நன்றி ! வணக்கம் !!!***

வடிவமைத்து அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 605 009.
வெளியிட்டோர் : நிதித்துறை, புதுச்சேரி – 605 001.